# வடபகுதி தாக்குதல் குறித்து ராணுவம் மௌனம்

(லண்டன்)
வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ தாக்குதல்கள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் மௌனம் சாதித்து வருவதாக பி. பி. ஸி தெரி

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 5 இதழ்: 252
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-10-1991

## தீவுப் பகுதியில் தாக்குதல் நிறுத்தம்

(கொழும்பு)
தீவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கடற்படையினதும், ஆகாயப்படையினதும், தரைப்படையினதும் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முப்படைத் தாக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் நேற்று வழமைபோல் இயங்கியது

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் நேற்று வழமைபோல் அலுவல்கள் நடைபெற்றன. வர்த்தக நிறுவனங்கள் அரச அலுவலகங்களும் முழுமையாக இயங்கின.

யாழ். போதனா வைத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ தமிழகத்தில் உள்ள

# இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப இந்தியா முடிவு

(கொழும்பு)
இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதென இந்தியா முடிவு செய்துள்ளது. இது குறித்து இரு நாடுகளும் உடன்பாடு கண்டுள்ளன.

இத்தகவலைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. என்.என். ஜா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

முதலில் ஒவ்வொரு அணியிலும் 500 பேரைக் கொண்டவர்களாக 2,000 அகதிகள் அனுப்பப்படுவர். இந்த அகதிகளின் பட்டியல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருமலையில் வந்திறங்கும் இவர்களைப் பின்னர் சொந்த இலங்கை அரச உடன்பட் இடங்களுக்கு அனுப்பிவைக்க முள்ளது என்றார். (சி)

## பாஷையூர் கடலில் பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பாஷையூர் கடல் பிராந்தியத்துக்கு அப்பாலிருந்து, கல்முனைத்தீவை நோக்கி கடற்படை பீரங்கிக்கப்பல் ஒன்று நேற்று மாலை பீரங்கி வேட்டுக்களை தொடர்ச்சியாக மேற்கொண்டது.

பீரங்கிப் படகு இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கும் போது கடற்படை விசைப் படகு ஒன்று அப்பிராந்தியத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிறிய படகுகள்மீது துப்

(4-ம் பக்கம் பார்க்க)

### நில நடுக்கத்தின்போது

## இந்திய உபஜனாதிபதி மயிரிழையில் தப்பினார்

(புதுடில்லி)
இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தின்போது இந்திய உபஜனாதிபதி திரு. சங்கர் தயாள் சர்மா மயிரிழையில் உயிர் தப்பினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## படை முகாம் மீது புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு சயில்தியைத்தில் அமைந்துள்ள படை முகாம் மீது, புலிகள் நேற்றுக் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்குள்ள பொலிஸாரின் காவல்நிலையம் மீதும், இராணுவக் காவல் அரண் மீதும் குண்டுத் தாக்குதலையும், கடும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் புலிகள் மேற்கொண்டனர்

(4-ம் பக்கம் பார்க்க)

## தொடர் நிவாரணம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
தீவுப்பகுதிகளிலிருந்து வெளியேறி தற்போது யாழ். குடாநாட்டில் அகதிகளாகத் தங்கியிருக்கும் பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக, யாழ். அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

### கருப்பசாமி சென்னை பயணம்

(கொழும்பு)
இந்திய வானொலி நிருபர் ஏ. கருப்பசாமி நேற்றுமாலை

(2-ம் பக்கம் பார்க்க)

### ★ யாழ். மாவட்ட இராணுவத் தளபதி

## பிரிகேடியர் விஜய விமலரத்ன மண்டைதீவுமோதலில் காயம்

(கொழும்பு)
இலங்கை இராணுவத்தின் யாழ். மாவட்டத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்ன, மண்டைதீவில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறையில் இருந்து மண்டைதீவை நோக்கி முன்னேறிவந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலின் போது பிரிகேடியர் விஜய விமலரத்ன காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## தொலைத்தொடர்பு நிலையம், கோட்டை தகர்ப்பாம்!

(கொழும்பு)
யாழ். நகர்ப்பகுதியில் புலிகளின் நிலைகள்மீது மேற்கொள்ளப்பட்ட உக்கிர தாக்குதலில் யாழ். கோட்டையும், தொலைத்தொடர்பு நிலைய கட்டிடமும் முற்றாகத் தகர்க்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## அரசின் முடிவிற்கு காமினி கண்டனம்

(கொழும்பு)
இந்திய வானொலியின் கொழும்பு நிருபர் கருப்பசாமியை இலங்கை அரசு வெளியேற்றியமை குறித்து காமினி திசநாயக்கா கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரை நாட்டை விட்டு வெளியேற்றுவது கட்டுமிறிய ஒரு எதிர்த்தாக்குதல் செயலாகுமென்றும் செய்தியாளர் மதியில் பேசிய திரு. காமினி திசநாயக்கா குறை கூறியுள்ளார்.

இதேவேளை இந்தச்செயல் அநாவசியமான ஒன் மூட்டும் செயல் என்று கொழும்புப் பத்திரிகைகள் கண்டித்துள்ளன.

## வடக்கு-கிழக்கில் இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கையாம்

(திருமலை)
வடக்கு-கிழக்கில் தற்போது இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கை நடைபெறுவதாக ஜனாதிபதி திரு. பிரேமதாசா திருமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்க்க அரசு தயாராக விருப்பதாகவும் இதற்குபுலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

# 90-ம் நாள்
# வீரவணக்கம்



**வீரவேங்கை அறிவொளி**
**ஸ்ரீபத்மநாதன் சத்தியசீலன் (குட்டி)**
(சுண்டுக்குளி)

வீர ஜனனம்: 26-11-70
வீர மரணம்: 22-07-1991

உன் தலைமை உறுதியானது
உன் பாதை கடினமானது
உன் பயணம் புனிதமானது
உன் கொள்கை நியாயமானது-அதைத்
தொடர உறுதி தேவையானது-நாமும்
அதன்வழி நடப்போம் என்பது சத்தியமானது
தசாப்தங்கள் பல கடந்தாலும்
தனியே ஒரு புலி இருந்தாலும்
தாயகம் காண்பதே அவன்
தாரக மந்திரம்
நாளது பல கடந்தாலும்-தாய்
நாடு காக்க நீ முனைந்ததை
நாமொரு போதும் மறவோம் நண்பா.
நாளை தமிழீழம் பிறக்கும் நம்பு;
நிம்மதியாய் துயில் கொள்
நீ இன்று.

நண்பர்கள்

(சி 5519)


# லலித்காமினியின் குற்றங்களை
## ஜனாதிபதி அம்பலப்படுத்துகிறார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான திரு. காமினி திஸநாயக்கா மீதும் திரு. லலித் அத்துலத் முதலி மீதும் ஜனாதிபதி பிரேமதாசா பழைய குற்றச் சாட்டுகளை ஆதாரத்துடன் கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இக்குற்றச்சாட்டுகளை சுமத்தினார்.

ஜனாதிபதி தமது உரையில்; ஆசியாவில் மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்றான யாழ். நூலகம் தீக்கிரையாக்கப் பட்டமைக்கு திரு: காமினி திஸநாயக்காவே பொறுப்பு என கூட்டணி செயலதிபர் தெரிவித்தார்.

எமக்கு முதலில் உதவியவர்கள் இஸ்ரேலியர்கள் (மொஸாட்) தான் என்று கூறி இலங்கையில் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை மூட திரு. லலித் அத்துலத்முதலி பூரண எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் கட்சி அதிருப்தியாளர்களுக்கு அந்நிய அரசுகள் நிதியுதவி அளித்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோகிகளாக மாறுவோருக்கு அது ஒரு அரசியல் தற்கொலையாகவே அமையும், சிலர் தமது பதவியை பயன்படுத்தி 50 லட்சம் ரூபா வரை சொத்துக்களை சேர்த்துள்ளனர். அது எப்படியென எவருக்குமே தெரியாது ஜே. வி. பியினால் அழித்தொழிக்கப் பட்டதாக கூறப்படும் மகாவலி அமைச்சு வாகனங்கள் திடீரென மீண்டும் நல்ல நிலையில் வெளிவந்துள்ளன; இவற்றில் ஒன்று எனிமர் குழுவினரின் காலிக் கூட்டத்திற்கு ஆட்களை ஏற்றிச்செல்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.

துறைமுகத்திலும் இடம் பெற்றுவந்த பல மோசடிகள் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளன; இப்போது ஒருவரின் சகபாடியாக மாறியுள்ளவர் முன்னர் அவர் குறித்து பல கேள்விகளை எழுப்பினர். இப்போது அவர் 50 லட்சம் ரூபா சொத்து எப்படி சேர்ந்ததென பதிலளிக்க வேண்டியவராயுள்ளார். இவர் இன்னமும் வந்து சேரவேண்டிய 3-வது கப்பல் பற்றிய விசாரணையில் பதிலளிக்க வேண்டியவராயுள்ளார் என்றும் ஜனாதிபதி கூறினார். (சி)

# விபத்தில் அகதிகள் இருவருக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் காங்கேசன் துறை வீதியில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் இரு பெண்கள் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்தபோது இவ்விபத்து நடந்தது.

காயமடைந்த செல்வி சந்திரவதினி சின்னத்துரை (20 வயது), திருமதி லக்சுமி நடராசா (52 வயது) ஆகியோர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

## கரபந்தாட்ட போட்டி

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலைய விளையாட்டுக் குழுவினர் லெப்டினன்ட் 'மலரவன்' ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட ரீதியில் கரபந்தாட்ட போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளனர். (139)

## இடமாற்றம்

(மாங்குளம்)

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் அ. இரசரத்தினம் கிளிநொச்சி கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (150)

## ஷெல் தாக்குதல் 8 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கடந்த சனி காலை நடந்த பயங்கர ஷெல் தாக்குதலின் போது எட்டுப்பேர் காயமடைந்தனர். வீடுகள் கடைகள் சேதமடைந்தன.

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று கொட்டடி சீனிவாசகம் வீதியிலுள்ள ஒரு வீட்டிற்குள் வீழ்ந்து வெடித்ததிலேயே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் காயமடைந்தனர்.

பரமநாதன் [40 வயது], பரமநாதன் லவநாதன் (10 வயது) பரமநாதன் குசலநாதன் (* வயது), சுப்பிரமணியம் சின்னத்துரை[60 வயது], திருமதி இராசசெல்லமணி சின்னத்துரை (50 வயது) ஆகியோரே காயமடைந்தவராவர்.

குருநகர் 4ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மரியாம்பிள்ளை இருதயதாஸ் [36] இராசசெல்லமணியும், குசலநாதனும் காயமடைந்தவர்.

## இராசி பலன்

22-10-1991
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 05)

சதுர்த்தசி மாலை 5-03வரை உத்திரட்டாதி காலை 7-13 வரை. அமிர்தசித்தயோகம். இராகுகாலம் மாலை 3-02முதல் மாலை 4-32 வரை. சுபநேரம் காலை 10-32 முதல் 12-02 வரை.

மேஷம்; எதிர்ப்பு, தொழில் முரண்பாடு, குடும்ப பகை.
இடபம்; தொழில் சிறப்பு. அதிகவரவு உல்லாசப்பயணம்.
மிதுனம்: சகோதர உதவி. பயணம், இனிய சந்திப்பு.
கடகம்: வசதிக் குறைவு. குடும்ப விரோதம், செலவு.
சிம்மம்: வாக்குக்கலகம், சஞ்சலம், அவமதியாதை.
கன்னி: மனவேற்றுமை. தொழில் லாபம். வரவு அதிகரிப்பு.
துலாம்: தானதர்மம், தெய்வீக செலவு, பாராட்டு.
விருச்சிகம்: உடல்உபாதை, மனைவியால் துன்பம், இனம்.
தனுசு: விடாமுயற்சி, காரிய வெற்றி, பெரியோர் ஆசி.
மகரம்: கருத்துமுரண்பாடு, வைத்திய செலவு, அசதி.
கும்பம்: கைப்பொருள் இழப்பு, இடமாற்றம், மனமுடை.
மீனம்: துணிச்சலானசெயல் தொழில் பாராட்டு, வெகுமதி.

ஜோஸ்யர்


UNIVERSITY OF JAFFNA.

# TENDER NOTICE

Tenders are invited for writing identification numbers on items belonging to Faculty of Science, University of Jaffna. (approximately 12, 000 Nos).

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 28-10-91 to 30-10-91 on producing receipt from Bursar, University of Jaffna for the following:

a) Non-refundable deposit - Rs. 250/-

b) Refundable deposit - Rs. 2500/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 6-11-91 at 10-00 a m.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

**Registrar**
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.

(A-1669)



# ஓராண்டு நினைவஞ்சலி

"தாயிற் சிறந்ததோர் கோயிலு மில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"



**திருமதி பிரான்சிஸ் தங்கம்மா**

மலர்வு: 05-11-1933
உதிர்வு: 01-11-1990
திதி: 22-10-1991

ஆருயிர் தெய்வமே! எங்கள் அன்புத்தாயே!
மின்னுமல் முழங்காமல் ஆண்டு ஒன்று ஆனதம்மா
ஆனாலும் ஆறுதம்மா உங்கள் நினைவு
எண்ணும்போது நெஞ்சு பிளக்கிறது அம்மா!
என்றுமே எங்களுடன் தான் நீங்கள் இருக்கிறீர்கள்
அம்மா! அம்மா!! அம்மா!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனின்
அருளை வேண்டுகிறோம்;

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர், பெருமக்கள்
உற்றார், உறவினர்.

3/3, பிரப்பங்குளம் வேலை,
யாழ்ப்பாணம்.

(சி 5509)



# யாழ். வர்த்தக சங்கம்
# முக்கிய அறிவித்தல்

யாழ். நகர் சகல வர்த்தகர்களுக்கும் ஓர் கலந்துரையாடல்/கருத்தரங்கு 23-10-91 புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்களால் நடாத்தப்படும்.

நகைக்கடை, ஆங்கில மருந்துக்கடை உட்பட சகல வர்த்தக உரிமையாளர்களும் நேரில் பங்குபற்றுதல் வேண்டும்.

(ஏ 1670)

தலைவர்

# இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக சகல கட்சிகளுடனும் அரசு பேசும்

## அமைச்சர் ரணில் கூறுகிறார்.

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் சமரச முயற்சிகளை ஏற்படுத்த அமைச்சர் தொண்டமான் போன்றோர் ஈடுபடலாம். அதில் தவறில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு யுத்தநிறுத்தத்துக்கு வரும்வரை இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும்."

இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர்களின் பல கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.

கே: வடக்கு-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக இருக்கவேண்டுமென இன்னாமிய நிலைய சொற்பொழிவில் அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறாரே? இதுபற்றி மந்திரி சபை ஆராய்ந்ததா?

ப: இஸ்லாமிய நிலையம், மற்றும் இடங்களில் ஆற்றப்படும் உரைகளையெல்லாம் மந்திரி சபையில் ஆராய்ந்து கொண்டிருக்கமுடியுமா?

கே: வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புப்பற்றி அரசு தீர்மானம் ஏதும் எடுத்துள்ளதா?

ப: இனப்பிரச்னை தொடர்பாக அரசு சகல கட்சிகளுடனும் பேசி முடிவுக்கு வரும்.

கே: மாகாண சபைகளுக்கு அளிக்கப்படும் நிதி, பாதுகாப்பு அதிகாரங்கள் பற்றி எல்லாம் தொண்டமான் கூறியிருக்கிறாரே?

ப: நிதி, பாதுகாப்பு விவகாரங்கள் சம்பந்தமாக சபைகளின் அதிகாரங்கள் ஏற்கனவே தெளிவாக்கப்பட்டுள்ளன.

கே: அமைச்சர் தொண்டமான் மந்திரி சபையில் தனது திட்டங்களை சமர்ப்பித்தாரா?

ப: இனப்பிரச்னைக்குரிய இறுதித்தீர்வு எவரிடமும் இப்போது இல்லை. உறுதியான இறுதியான தீர்வுகள் கிடைத்தால் சர்வகட்சி மகாநாட்டிலும் தெரிவுக்குழுவிலும் ஆராய்ந்து முடிவெடுத்து மந்திரி சபையிலும் அங்கீகாரம் பெறப்படும்.

கே: அமைச்சர் தொண்டமான் மந்திரி சபையின் கூட்டுப்பொறுப்புக்கு உட்பட்டவர் அல்லவா?

ப: கூட்டுப்பொறுப்புப் பற்றி முதலில் அறிந்துகொள்ளுங்கள். மந்திரி சபையின் தீர்மானங்கள் சம்பந்தப்பட்டதே கூட்டுப்பொறுப்பு.

கே: மந்திரி சபையின் அனுமதியுடனா தொண்டமான் சமரச முயற்சிகளில் ஈடுபடுகிறார்?

ப: சமரச முயற்சியில் யாரும் ஈடுபடலாம். அது நல்லதுதானே? பிரச்னை தீரவேண்டும். படைவீரர்கள் தொடர்ந்தும் உயிரிழக்க அனுமதிக்க முடியாது.

கே: விடுதலைப் புலிகளுடன் அமைச்சர் தொண்டமான் பேசப்போகின்றாரா?

ப: புலிகள் பற்றி இப்போது பேச்சு இல்லையே?

கே: புலிகளிடமிருந்து அமைச்சர் தொண்டமானுக்குக் கடிதம் வந்துள்ளது. அவரும் பதில் அனுப்பியுள்ளார்?

ப: அப்படிப் பேசுவதில் தவறில்லையே. அமைச்சர் தொண்டமானின் முயற்சியை பயன்படுத்தி இனவாதத்தை கிளப்ப முயற்சிக்கின்றீர்களா?

கே: அமைச்சர் தொண்டமான் பேசுவதை நாம் எதிர்க்கவில்லை. மந்திரி சபை அது பற்றி ஆராய்ந்ததா என்றே அறிய விரும்புகின்றோம்.

ப: மந்திரி சபை இதில் சம்பந்தப்படவில்லை.

கே: புலிகளுடன் அரசு பேசுமா?

ப: ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு, யுத்தநிறுத்தத்துக்கு உடன்பட்டால் பேசலாம். தொண்டமானின் முயற்சி பற்றி பத்திரிகைகளில் திரித்துக் கூறப்பட்டுள்ளது. இனவாதத்தைத் தூண்டும் முயற்சி இது.

கே: தொண்டமானின் உரை எழுத்து ரூபத்திலும் பத்திரிகையாளருக்குத் தரப்பட்டது?

ப: இப்படித்தான் ஈரோஸின் வருகைபற்றி பிரமாதப்படுத்தப்பட்டது. யுத்தநிறுத்த நிபந்தனை பற்றியும் கூறப்பட்டது. எல்லாம் பொய்த்துவிட்டன.

கே: ஈரோஸ் பிரதிநிதிகள் கொழும்புக்கு வந்தனர். தேர்தல் ஆணையாளரையும் சந்தித்தனரா?

ப: ஆம். ஆனால் நீங்கள் எழுதியதுபோல் ஒன்றும் நடக்கவில்லை. (வி)

---

## சிரமதானம்

(சாவகச்சேரி)

உலகலயன்ஸ்கழகதினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிரமதானம் மேற்கொண்டதுடன் வாட்டில் உள்ள நோயாளர்களுக்கு குளிர்பானம் வழங்கினர்.

---

## விதைநெல் விநியோகம்

(உடுவில்)

வடபகுதி விவசாயிகளுக்குத் தேவையான விதைநெல் வழங்க தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வடபகுதியிலுள்ள கிராமிய உற்பத்திக்குழுக்கள் மூலம் விதைநெல், விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் தத்தம் பகுதியில் உள்ள கிராமிய உற்பத்திக் குழுக்களின் பிரதேச இணைப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (109)

---

## தையல் பயிற்சி வகுப்பு

(உடுவில்)

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தையல் பயிற்சி போதனாசிரியர்களுக்கு மூன்று மாத தையல் பயிற்சி வகுப்புகளை நடாத்த கிராம அபிவிருத்தி திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் வடபகுதியைச் சேர்ந்த சகல கிராம அபிவிருத்தி சங்கங்களைச் சேர்ந்த தையல் பயிற்சி போதனாசிரியர்களும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

---

★ அகதிகள் மீது தாக்குதல்

### 12 நகரங்கள்; 40 கட்டிடங்களில்

# 42 ஜேர்மன் நாஸிகள் கைது

(கிழக்கு பேர்லின்)

வெளிநாட்டு அகதிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வந்த 42 கிழக்கு ஜேர்மன் வாலிபர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து பயங்கர ஆயுதங்களையும், தடைசெய்யப்பட்ட ஏராளமான நாஸி பிரசுரங்களும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிசாருக்கு கிடைத்த ரகசியத் தகவலைத்தொடர்ந்து கிழக்கு ஜேர்மனியில் உள்ள 12 நகரங்களில் உள்ள 40கட்டிடங்களை பொலிசார் ஒரே நேரத்தில் திடீரென முற்றுகையிட்டபோது, மேற்படி வாலிபர்களையும், ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

அண்மைக் காலத்தில் இவர்கள் மேற்கொண்ட பல தாக்குதல்களில் 4 இலங்கைத் தமிழர் கொலைப்பட்டும் மூவர் அவயவங்களை இழந்தும் பலர் படுகாயமடைந்துமுள்ளனர். (வி)

---

## பாலர் கல்வி அவசியம்

(யாழ்ப்பாணம்)

எமதுசமுதாயத்திற்குபாலர் கல்வி மிகவும் அவசியம். அதிலும் பாலர் கல்வி நவீனமயப்படுத்தப்பட்டு போதிக்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ் கொட்டடி சனசமூக நிலைய பாலர் கல்வி நிலையத்தில் நடந்த கலைமகள் விழாவில் கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் திரு. கு. சண்முகநாதன் கூறினார். இவ்விழா நிலையத் தலைவர் திரு. மு. ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

---

## பனைமர நாற்றுகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வருட காலபோகத்தில் யாழ். குடா நாட்டில் இருபதினாயிரம் பனைமர நாற்றுகளை நடுவதற்கு பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான 2 வருட நாற்றுகளை இச்சபை தயார்நிலையில் வைத்துள்ளது.

நாற்றுகளை நட்டு பாதுகாப்பாக வளர்க்க முன்வரும் பொதுஸ்தாபனங்களுக்கு இந்த பனைமர நாற்றுகளை இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன. [123]

---

## விவசாயிகளுக்கு துலா வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சிறுதானியம் மற்றும் பணப்பயிர் தவிர்ந்த உணவுப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு நீர் இறைப்பு வசதிக்காக 'துலா' செய்துகொடுப்பதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டம் 25% மானியத்திலும் 75% கடனடிப்படையிலும் அமையும். எனவே துலா தேவையான சகல விவசாயிகளும் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக, தமிழீழ ஆய்வு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

---

வெளிவாரி பட்டப்படிப்பு

## மாணவருக்கு இன்று புகுமுக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கான 90, 91ம் கல்வி ஆண்டிற்கான மாணவர் புகுமுக நிகழ்ச்சி இன்று 22ம் திகதி காலை 9 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறவுள்ளதாக வெளிவாரி கல்வி தொடர்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த சகல மாணவர்களும் மேற்படி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

1990 – 91ம் கல்வியாண்டிற்கான கலைப்பட்டத்திற்கான உள்ளக வகுப்புகள் நவம்பர் 4ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் புதியகல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களும் வகுப்புகளுக்கு சமூகமளிக்கும்படி யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

---

# ஸம்பிய ஜனாதிபதியின் மகனுக்கு மரணதண்டனை

(லுஸாகா)

ஸாம்பியா ஜனாதிபதி திரு. கென்னத் கவுண்டாவின் சுவீகார மகனுக்கு லுஸாகா உயர்நீதி மன்றம் மரண தண்டனைக்குத்தீர்ப்பளித்துள்ளது.

1989ம் ஆண்டு இளம் பெண் ஒருவரை சுட்டுக்கொன்றதற்காக ஜனாதிபதியின் மகனான கம்பாரஜ்க்கு இத்தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தான் குற்றவாளி யல்ல என்றும் தனது பாதுகாப்பிற்காகவே அந்தப் பெண்ணை கொன்றதாகவும் அவர் கூறி வருகிறார். (வி)

---

## கல்வி நிர்வாகசேவை பதவி

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழு கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றும் வகுப்பு (III ஆம்) பதவிகளிலுள்ள வெற்றிடங்களுக்கு திறமை சேவை மூப்பு அடிப்படையில் தகுதியுடையவர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 28ம் திகதி கொழும்பில் நடைபெறும். இதற்குரிய விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 25ம் திகதிக்கு முன் கல்விச்சேவை ஆணைக்குழுவிற்குக் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தமதுவிண்ணப்பங்களை தமக்குரிய கோட்ட அலுவலக உதவி/பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுவிபரங்களும் செப்டம்பர் மாதம் 27ம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. [71]

---

# கொட்டடி அகதிகள் நவாலியில் தஞ்சம்

(மானிப்பாய்)

நவாலியில் கொட்டடி, நாவாந்துறை, அராலி பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாக தங்கியுள்ளனர்

இப்பகுதிகளில் கடந்த 19ம் திகதி இடம்பெற்ற விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய இவர்கள் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் சென்று நவாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, நவாலி அரசடி மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை வேலணையிலிருந்து கடந்த சில தினங்களுக்குமுன் இடம்பெயர்ந்து வந்த பல குடும்பங்களும் இப்பகுதியில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (71)

---

## சேமித்துவைத்த நெல், தானியங்களை கைவிட்டு வந்தனர்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியிலிருந்து வெளியேறிய மக்களில் மீனவர்கள், விவசாயிகள், தங்கள் வீடமிருந்த தொழில் உபகரணங்கள், நெல், உட்பட தானிய வகைகள், செத்தல் மிளகாய், வெங்காயம் போன்றவற்றினை கைவிட்டு யாழ்நகர் வந்துள்ளனர்.

தங்கள் சேமிப்பிலிருந்த பொருட்களை எடுத்துவருவதற்குரிய வசதிகள் போதியளவு இல்லாததே காரணம் எனத் தெரிவித்தனர். (56)

## விடுதலைப் போராட்டத்திற்கு உதவி செய்யாவிட்டாலும் துரோகம் இழைக்காதீர்கள்”

### விடுதலையாளேரிடம் ‘பரா’ வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

“விடுதலைப் போராட்டத்திற்கு உதவி செய்யாவிட்டாலும் துரோகம் இழைக்காதீர்கள்” இவ்வாறு நேற்று கோண்டாவிலில் வைத்து விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் மத்தியில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்தார்.

அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; “பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை சமுதாயத்திற்கு உகந்தவர்களாக சீர்திருத்தி ஒப்படைக்கிறோம் அவர்கள் மீண்டும் தீயவழிகளில் செல்லாமல் பாதுகாக்கவேண்டியது உங்கள் பொறுப்பாகும்” என்றார்.

யாழ். மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசுகையில் இன்றைய சமுதாயத்தை யாரும் சீரழிக்க முடியாது ஏனெனில் விடுதலைப் புலிகள் தனித்து நின்று நடாத்தும் போராட்டம் அல்ல இது; இது ஒரு மக்கள் போராட்டம்.”

“தவறுகள் நடைபெறும் போது அவற்றை திருத்துவதற்கு குடும்பத்தலைவன் எவ்வாறு நடவடிக்கை எடுப்பானோ அதேபோல்தான், சதிகாரர்களின் வலையில் சிக்கிசீரழிந்த உங்களை நாங்கள் திருத்தியுள்ளோம். என்றார்.

இவ்வைபவத்தில் நிதிப் பொறுப்பாளர் திரு. ரவி, யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு தீலீப் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வி)

### அறவழி நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சியில் தஞ்சமடைந்தவர்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவினரால் இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரையும் ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### வவுனியாவில் ஊரடங்குச் சட்டம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் நேற்று மாலை 6-00 மணியில் இருந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

### 4-வது நினைவு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் 1987ம் ஆண்டு கடமை நேரத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்ட 21 ஊழியர்களின் 4வது ஆண்டு நினைவஞ்சலி நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இரண்டு நிமிட மௌனஞ்சலியுடன் இரங்கலுரையும் நிகழ்த்தப்பட்டதுடன் அன்னை வேளாங்கண்ணி, ஞானவைரவர் ஆலயங்களிலும் விசேட ஆராதனை, பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இரங்கலுரையினை ஊழியர்கள் சார்பில் ஊழியர் மு. ஈழத்தமிழ்மணி நிகழ்த்தினார். (56)

## சிப்பாய் பலி மனைவி தற்கொலை

(கொழும்பு)

இரு வாரங்களுக்கு முன் இராணுவ சிப்பாய் ஒருவரை திருமணம் செய்துகொண்ட புதுமணப்பெண் ஒருவர் தமது கணவன் மணலாறு மோதலில் பலியானதை யடுத்து தற்கொலை செய்துகொண்டார்.

வர்க்காபொலையை சேர்ந்த இந்த இராணுவ சிப்பாய் புலிகளின் தாக்குதலில் பலியானதையடுத்து அவரது மரணச் சடங்கில் கலந்துகொண்டபின் மனைவி தற்கொலை செய்துகொண்டார். (சி)

### ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தற்போதைய இராணுவ நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் அ. தேவராசா தெரிவித்தார். (வி)

## மாவீரர் வார கலைநிகழ்ச்சிகள் யாவும் அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 21ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை தமிழீழத் தேசிய நாளையொட்டிய மாவீரர் வாரம், பெரிய அளவில் கொண்டாடப்படவிருக்கும் வேளையில், மாவீரர் நாளையொட்டி யாழ். மாவட்டத்தில் அரங்கேற்றவுள்ள கலை நிகழ்வுகள் யாவும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுகழகத்தின் அங்கீகாரம் பெறுவது கட்டாயமானதாகும்.

மாவீரர் நாளையொட்டி மேடையேற்றும் கலை நிகழ்ச்சியின் எழுத்துப் பிரதிகள் யாவும் இம்மாதம் 30 திகதி முன்னதாக கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட கலை, பண்பாட்டுக்கழகச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

### யாழ். மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மோதலில் மேலும் 10 படையினர் காயம் அடைந்தனர். (63)

### தொலைத்தொடர்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படை, கடற்படையினரின் உதவியுடன் இத்தாக்குதல் நடாத்தப்பட்டு இவ்விரு இடங்களும் தகர்க்கப்பட்டதாவுகம் இவ் அமைச்சு நேற்று அறிவித்தது. (சி)

### வடக்குகிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பட்டால் ஆயுதங்களைப் போட்டுவிட்டு பேச்சு நடாத்த வருமாறும் அவர் கூறினார்.

வடக்கு-கிழக்கில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு முயன்று வருவதாகவும் இதற்கான இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாகவும் ஜனாதிபதி அங்கு கூறினார். (சி)

### யாழ். நகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் ஆயிரக்கணக்கான நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவிலும் ஏனைய கிளினிக்குகளிலும் சிகிச்சை பெற்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

நகரில் நேற்று வழமை போல் சனநடமாட்டம் அதிகரித்தும் காணப்பட்டது. (56)

## கடற்றொழில் அபிவிருத்திப் போர்வையில் சிங்கள மீனவருக்கு அரசு பல்வேறு உதவி

(திருகோணமலை)

திருகோணமலையில் கடற்றொழில் அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்கள மீனவர்களுக்கு அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது.

கடற்றொழில் அமைச்சு திருகோணமலைக்கு மாற்றப்பட்டதிலிருந்து துரிதகதியில் உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகளுடன் இச்செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

ஏற்கெனவே ஒரு கோடி ரூபா செலவில் குடிநீர், மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வாதிக்கப்பட்டோர் என்ற பேரில் 10 லட்சம் ரூபாவும் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் 25 மீன்பிடி இழுவைக் கப்பல்களும் ஐ. நா. அகதிகள் நிவாரண உதவியுடன் மேலும் 89 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி இழுவைக் கப்பல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## தீவக அகதிகளுக்கு ஒருவார நிவாரணம்

(சித்தன்கேணி)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு ஒருவார காலத்துக்கான இலவச நிவாரணத்துக்கான அனுமதியை சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் வழங்கியுள்ளார்.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்களுக்கு ஒருவாரத்துக்கான இலவச நிவாரணத்தை உடனடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (137)

## சேதமடைந்த கட்டிடங்கள் 29 லட்சம் ரூபா மதிப்பீடு

(சித்தன்கேணி)

சித்தன்கேணிச் சந்தியில் இடம்பெற்ற வான் தாக்குதலில் சேதமடைந்த ஒன்பது வீடுகளின் கட்டிடங்களுக்கும் உடைமைகளுக்குமான மதிப்பீடு சுமார் இருபத்தொன்பது லட்சம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சேதமடைந்த ஒன்பது வீடுகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்ட சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கட்டுக் கிழக்கு பகுதி கிராமசேவை அலுவலர் திரு. வி. சி. கதிர்காமநாதனின் இந்த மதிப்பீட்டு அறிக்கை அரசாங்க அதிபரின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. (137)

## பாகிஸ்தான் வெற்றி

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் மூன்று நாடுகளிடையே நடைபெற்றுவரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் தேற்றைய ஆட்டத்தில் பாகிஸ்தான் கோஷ்டி மேற்கிந்தியக்கோஷ்டியை ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

மேற்படி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கோஷ்டி 50ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. மே. இந்தியக் கோஷ்டி 50வது ஓவரின் கடைசிப்பந்து வீச்சில் இறுதி விக்கெட்டை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

### நிலநடுக்கத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரப் பிரதேசத்தில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றிருந்த திரு. சங்கர்தயாள் சர்மா, ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். இதன்போதே அங்கு பெரும் நில நடுக்கம் ஏற்பட்டது

அப்போது அந்த ஹோட்டலின் பெரும் பகுதி பலத்த சேதமடைந்தது. எனினும் திரு. சர்மா எதுவித உயிராபத்தோ, காயங்களோ இன்றித் தப்பினார். இந்த நில நடுக்கத்தில் 300 பேர் பலியானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

### வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமான, கடற்படைத் தாக்குதலில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து எதனையும் கூற இராணுவ வட்டாரங்கள் மறுத்துவிட்டனவாம்.

இதேவேளை, யாழ் நகர் மீது சகல பகுதிகளிலும் இருந்து பலத்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

### கருப்பசாமி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து சென்னைக்கு விமானமூலம் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இவரை நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என்று நேற்றுவரை இலங்கை அரசினால் காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### தீவுப்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் மூலம் மண்டைதீவு, ஊர்காவற்றுறை தீவுகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாஷையூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தது.

கல்முனைத்தீவை நோக்கி ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகள் கடலினுள்ளே விழுந்து வெடித்து சிதறின. (வி)

### படை முகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராம்.

தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிப் படையினர் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (சி)

### தொடர் நிவாரணம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தற்போது தழங்கப்படும் ஒருவார நிவாரணம் மட்டுமே வழங்கப்படுமென்றும், இந்த நிவாரணத்தை யாழ். நகரில் இதுவரை பெற்றுக்கொள்ளாத மக்கள் தமது சொந்த இடங்களில் உள்ள கூ. ச. கிளைகளில் பெற்றுக்கொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் வரை, தொடர்ச்சியாக நிவாரணம் வழங்குவதற்கு அனுமதி அளிக்கும்படி அரசுக்கு அவசரவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (வி)

## திரைப்பட பல்கலைக்கழகம்

(சென்னை)

சென்னையில் திரைப்பட பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## வர்த்தகவியல் தராதரப் பத்திர பரீட்சை

(மானிப்பாய்)

இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் வர்த்தகவியல் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடமிருந்து கோரியுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 23 ம் திகதி தொடக்கம் நடைபெறும். விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதித் திகதி இம்மாதம் 25 ம் திகதியாகும்.

இது பற்றிய முழு விபரங்களும் செப்டம்பர் மாதம் 27ம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (71)

இப் பத்திரிகை “ஈழநாடு” லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice under Licence Number D/10326/81